(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1 (2).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2010, யூன் 14, திங்கட்கிழமை வெளியிடப்பட்டது

## 2010, யூன் 29, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2010) — இரண்டாம் மதிப்பீடு.

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.06 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

### 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 06

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 28502 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "விவசாயப்பண்ணை முற்பணக் கணக்கு — விவசாயத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 321,000,000 இலிருந்து ரூபா 260,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 321,000,000 இலிருந்து ரூபா 210,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,

நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.01.01

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.07 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 07

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பண்டசாலை முற்பணக் கணக்கு — இலங்கை புகையிரதத் திணைக்களங்கள்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 1,200,000,000 இலிருந்து ரூபா 1,800,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 1,200,000,000 இலிருந்து ரூபா 700,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 500,000,000 இலிருந்து ரூபா 850,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.01.01

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.3),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.20 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமெனப் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 20

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பிற அரசாங்கத்தின் சார்பில் கொடுப்பணவுக்கான முற்பணக்கணக்கு — அரச கணக்குகள் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 5,300,000 இலிருந்து ரூபா 4,300,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.04.22

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.4),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.21 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமெனப் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 21

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பல்லின முற்பணக்கணக்கு — அரச கணக்குகள் திணைக்களங்கள்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 200,000,000 இலிருந்து ரூபா 20,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 560,000,000 இலிருந்து ரூபா 44, 700,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 588,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,

நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.04.22

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.5),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.23 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமெனப் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 23

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 01602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "வழங்குவதற்கும் பயன்படுத்துவதற்கும் பணம் முற்பணமாக வழங்குதல் முற்பணக் கணக்கு — இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா 6,000,000 இலிருந்து ரூபா 10,700,000 வரை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.04.22

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.6),— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகள் இத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனப் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

( இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்

நிதி ஆண்டு 2009 தொடர்பில் 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சினால் அதிகாரமளிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் | | III அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லைகள் | | IV அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பற்று மீதிகளின் உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இருந்து | வரை | இருந்து | வரை | இருந்து | வரை | |
| 1. | வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சர் | 12501 | - | - | - | - | 20,000,000 | 30,000,000 | 1 |
| 2. | கடற்றொழில் நீர் வளங்கள் திணைக்களம் | 29001 | - | - | - | - | 90,000,000 | 97,000,000 | 2 |
| 3. | நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு | 11001 | - | - | - | - | 50,000,000 | 55,000,000 | 3 |
| 4. | ஏற்றுமதி அபிவிருத்தி சர்வதேச வர்த்தக அமைச்சர் | 16701 | - | - | - | - | 9,000,000 | 13,000,000 | 4 |
| 5. | தொழில் நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம் | 21501 | - | - | - | - | 130,000,000 | 247,000,000 | 5 |
| 6. | மீள் குடியமர்த்துகை, அநர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் | 14501 | - | - | - | - | 15,000,000 | 21,000,000 | 8 |
| 7. | வர்த்தகம், வாணிபம் நுகர்வோர் அலுவல்கள் மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சர் | 11601 | - | - | - | - | 21,000,000 | 25,000,000 | 9 |
| 8. | அரசாங்க அச்சாளர் திணைக்களம் | 21101 | - | - | - | - | 175,000,000 | 245,000,000 | 10 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9. | மாவட்டச் செயலகம், மொனராகல | 27701 | - | - | 23,500,000 | 18,000,000 | - | - | 11 |
| 10. | மாவட்டச் செயலகம், கண்டி | 25801 | - | - | - | - | 155,000,000 | 172,000,000 | 12 |
| 11. | மாவட்டச் செயலகம், மாத்தறை | 26201 | - | - | - | - | 165,000,000 | 169,000,000 | 13 |
| 12. | மாவட்டச் செயலகம், புத்தளம் | 27301 | - | - | - | - | 120,000,000 | 142,000,000 | 14 |
| 13. | மாவட்டச் செயலகம், அம்பாறை | 27001 | - | - | 29,500,000 | 27,000,000 | 72,000,000 | 170,000,000 | 15 |
| 14. | மாவட்டச் செயலகம், கச்சேரி, கிளிநொச்சி | 26801 | - | - | - | - | 26,000,000 | 29,000,000 | 16 |
| 15. | மாவட்டச் செயலகம், இரத்தினபுரி | 27801 | - | - | 35,400,000 | 26,000,000 | 115,000,000 | 132,000,000 | 17 |
| 16. | மாவட்டச் செயலகம், பொலன்னறுவ | 27501 | - | - | - | - | 73,000,000 | 74,000,000 | 18 |
| 17. | பெற்றோலியம், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் | 11501 | - | - | - | - | 6,500,000 | 8,200,000 | 19 |
| 18. | இலங்கை கடற்படை | 22301 | - | - | - | - | 600,000,000 | 677,000,000 | 22 |
| 19. | மலையக சிறு பயிர்ச் செய்கை புனரமைப்புத் திணைக்களம் | 30501 | - | - | - | - | 5,000,000 | 6,000,000 | 24 |
| 20. | சட்ட அலுவல்கள் திணைக்களம் | 32301 | - | - | - | - | 1,185,000 | 1,300,000 | 25 |
| 21. | முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் | 32401 | - | - | - | - | 1,900,000 | 8,500,000 | 26 |

2009 ஏப்ரல் 06 ஆம் திகதி
கொழும்பு - 01.

ஒப்பம் : மஹிந்த ராஜபகஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# 2010, யூன் 30, புதன்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0033/'10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இன்றுள்ளவாறான நாட்டின் மொத்த கோதுமை நுகர்வையும்,

(ii) உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் அளவு மற்றும் இறக்குமதி செய்யப்படும் அளவு ஆகியவற்றை வெவ்வேறாகவும்,

(iii) கடந்த 20 வருடங்களில் நிலவும் கோதுமைக்கான சில்லறை விலைகளை வருடாந்த அடிப்படையிலும்,

(iv) நுகர்வோரின் சுமையைக் குறைப்பதற்கு கோதுமைக்கான மானியம் ஏதாவது வழங்கப்படுகிறதா என்பதையும்,

(v) அவ்வாறெனில், இற்றைவரை வழங்கப்பட்ட மானியத்தொகையையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்ளூரில் உ ற்பத்தி செய்யபட்ட கோதுமை, நுகர்வோரைச் சென்றடையும் வரை அதன்மீது இற்றை வரை விதிக்கப்பட்ட எல்லா வரிகளையும் அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0034/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இற்றைவரை திறக்கப்பட்ட "லக் சதொச" கடைகளின் எண்ணிக்கையையும்,

(ii) இதற்கென முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தையும்,

(iii) மூலதனமெதுவும் பயன்படுத்தப்படாவிடில், கடைகள் வாடகைக்கு எடுக்கப்பட்ட, கொள்வனவு செய்யப்பட்ட அல்லது சுவீகரிக்கப்பட்ட விதத்தையும் மற்றும் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட விதத்தையும்,

(iv) "லக் சத்தொச" வின் இற்றைவரைக்குமான மாதாந்த மொத்தப் புரள்வையும், மற்றும்,

(v) இற்றைவரைக்குமான மொத்த விற்பனைக் கிரயத்தையும், நிதியிடற் கிரயத்தையும் தேறிய இலாபத்தையும் அல்லது நட்டத்தையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வனைத்துக் கடைகளிலும் பணிபுரியும் பணியாட்டொகுதியினர் மற்றும் ஆளணியினர் என்போரின் எண்ணிக்கையையும்,

(ii) ஒவ்வொரு நபருக்கும் சம்பளமாகச் செலுத்தப்படும் தொகையையும் மற்றும் சராசரிச்சம்பளத்தையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) கடந்த 5 வருடங்களுக்குமான வருடாந்த இலாபத்தை அல்லது நட்டத்தை வருடாந்த அடிப்படையில் இச்சபைக்கு அவர் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0035/'10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2010 ஏப்பிரல் 30 ஆம் திகதியிலுள்ளவாறு அரசாங்கத்தினால் செலுத்தப்பட வேண்டிய மொத்த உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கடன்களின் (திறைசேரி உண்டியல்கள் உட்பட) தொகையினை வெவ்வேறாக அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2005, 2006, 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகள் ஒவ்வொன்றிலும் அரசாங்கத்தினால் பெறப்பட்டுள்ள மொத்தக் கடன்கள் (திறைசேரி உண்டியல்கள் உட்பட) எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் அரசாங்கத்தினால் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கடன்களுக்காக வட்டியாகவும் தவணைக் கட்டணங்களாகவும் செலுத்தப்பட்டுள்ள தொகையினையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0067/'10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின், தலாவ கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தலாவ சந்தி, தம்பரெல்ல வீதியில் 1கி.மீ. தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப் பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற போது, நியமங்களுக்கேற்ப வேலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0068/'10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின், கரகஹவல, பிங்கம, மெதஆர கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கரகஹவல, மெதஆர, ஹிங்கார வீதியில் 5கி.மீ. தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப் பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற போது, நியமங்களுக்கேற்ப வேலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0069/'10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு 8 வருடங்களுக்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, கட்டுவன பிரதேச செயலாளர் பிரிவின், வதுகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கொலொன்கஹஹேன வீதியில் 300 மீற்றர் தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப் பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற போது, நியமங்களுக்கேற்ப வேலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0102/ '10

கௌரவ அஜித் குமார,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் உள்ளிட்ட குழுவொன்று 2007 - 2008 ஆம் ஆண்டில் ருஹுணு பல்கலைக்கழகத்தில் கணக்காய்வொன்றை மேற்கொண்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கணக்காய்வுக்கு ஏற்புடையதான 2008.01.29 ஆம் திகதிய கணக்காய்வு அறிக்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) மேற்படி அறிக்கைக்கு அமைய,

(i) குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நபர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்,

(ii) அவர்களுக்கெதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

0116/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) "நமக்காக நாம்" நிதியம் ஆரம்பிக்கப்பட்ட திகதியினையும், அதன் நோக்கங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி நிதியத்திற்கு,

(i) இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ள முழுப் பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(ii) அரசாங்கம் வழங்கியுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) அரசாங்கம் தவிர்ந்த பணம் வழங்கிய நிறுவனங்களும் நபர்களும் யாவர் என்பதையும்,

(iv) மேற்படி நிறுவனங்களினாலும் நபர்களினாலும் வழங்கப்பட்ட பண அளிப்புகள் வேறுவேறாக யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி நிதியத்தினால் செயற்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்,

(ii) அவற்றிற்காக செலவழிக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) தற்போது நிதியத்தில் மீதமாயுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்,

(iv) நிதியத்தின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடுகளை மேற்கொள்கின்ற முகாமைத்துவ சபை உறுப்பினர்களது பெயர்களும், அவர்கள் வகிக்கும் பதவிகளும் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0119/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 மார்ச் 31 வரை, இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட சேலைனின்,

(i) தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) வகை யாது என்பதையும்,

(iii) இறக்குமதிச் செலவு எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த தினங்களில் சேலைன் தட்டுப்பாடு குறித்து பல்வேறு தகவல்கள் பத்திரிகைகளில் வெளிவந்ததோடு, அத்தகையதோர் நிலமை ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(ii) அத்தகையதோர் நிலையினைத் தோற்றுவிப்பதில் எவரேனும் உத்தியோகத்தர் தொடர்புபட்டு இருப்பாராயின், அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0120/ '10

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கையில் மருந்துப் பற்றாக்குறையொன்று தோன்றியுள்ளதாக 2010 மே மாதத்தில் வெளிவந்த ஊடக அறிக்கைகளை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) மேற்படி மருந்துப் பற்றாக்குறைக்கான காரணங்கள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) மருந்து போன்ற அத்தியவசியப் பொருட்கள் போதியளவு களஞ்சியசாலைகளில் இருக்க வேண்டுமென்பதை அவர் ஏற்றுக் கொள்கின்றாரா?

(ஈ) (i) அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மருந்து வகைகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) இலங்கைக்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(iii) அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் அடைந்துள்ள நட்டம் அல்லது பெற்றுள்ள கடனின் அளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், என்?

0130/ '10

கௌரவ றொசான் றணசிங்ஹ,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2005 ஆம் ஆண்டளவில் நாட்டில் செயற்படுத்தப்பட்ட கிராமிய மின் திட்டங்களின் பெயர்கள், அந்தந்த மாவட்டங்களின் அடிப்படையில் யாவையென்பதையும்,

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமிய மின் கருத்திட்டங்களின் பெயர்கள், ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் யாவையென்பதையும்,

(iii) அந்த ஒவ்வொரு கருத்திட்டத்திற்காகவும் செலவு செய்யப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iv) எதிர்காலத்தில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ள கிராமிய மின் திட்டங்கள் யாவையென்பதையும்,

(v) அதன் பொருட்டு செலவு செய்ய எதிர்பார்த்துள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0132/ '10

கௌரவ ஜானக பண்டார,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கண்டி மெத தும்பர வுட்சயிட் தோட்டத்தில் 810.31 ஹெக்ரயர் காணி 167,470.00 ரூபா வருடாந்த குத்தகைக்கு, கொழும்பு 03, சயிமன் ஹேவாவித்தாரண வீதியிலுள்ள மருதி தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த குத்தகை உடன்படிக்கைக்கு அரசின் விலை மதிப்பீடும் அமைச்சரவை அனுமதியும் பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) மேற்படி குத்தகை உடன்படிக்கை சட்டபூர்வமானதா என்பதையும்,

(iii) குத்தகைக்காரர், குத்தகை உடன்படிக்கைக்கமைய நடந்துகொண்டுள்ளாரா என்பதையும்,

(iv) அவ்வாறில்லாவிடின் அதற்கு எதிராக கூட்டுத்தாபனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) குத்தகைக்காரர் சட்டபூர்வமாக நடந்துகொண்டிருக்காவிடின், மேற்படி குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்து அந்தக் காணியை கூட்டுத்தாபனத்திற்குப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) இதுவரை அவ்வாறு சட்டபூர்வமாக நடந்துகொள்ளாவிடின், அதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) இவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0134/ '10

கௌரவ அருந்திக்க பெர்னாந்து,— துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிக்கச் செலவாகும் மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) அதற்காக எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி துறைமுகம் நிர்மாணிக்கப்படுவதன் நோக்கங்கள் யாதென்பதையும்,

(iv) அதன் நிர்மாணங்கள் எப்போது முடிவுறுத்தப்படும் என்பதையும்,

(v) நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஏற்படும் வசதிகள் மற்றும் வர்த்தக ரீதியான நன்மைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0138/ '10

கௌரவ உதித் லொக்குபண்டார,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) "கிழக்கின் உதயம்" வேலைத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 24 நீர்த்தேக்கங்களுக்கு நன்னீர் மீன் குஞ்சுகள் விடுவிக்கப்பட்டன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு விடுவிக்கப்பட்ட நன்னீர் மீன் குஞ்சுகளின் பண ரீதியிலான பெறுமதி யாது என்பதையும்,

(ii) குறிப்பிட்ட நீர்த்தேக்கங்களுக்கு விடுவிக்கப்பட்ட நன்னீர் மீனினங்கள் யாவையென்பதையும்,

(iii) இதிலிருந்து வருடாந்தம் எதிர்பார்க்கப்படும் நன்னீர் மீன்வளம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) "வடக்கின் வசந்தம்" வேலைத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 97 நீர்த்தேக்கங்களுக்கு நன்னீர் மீன் குஞ்சுகள் விடுவிக்கப்பட்டன என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) அவ்வாறு விடுவிக்கப்பட்ட நன்னீர் மீன் குஞ்சுகளின் பண ரீதியிலான பெறுமதி யாது என்பதையும்,

(ii) குறிப்பிட்ட நீர்த்தேக்கங்களுக்கு விடுவிக்கப்பட்ட நன்னீர் மீனினங்கள் யாவையென்பதையும்,

(iii) இதிலிருந்து வருடாந்தம் எதிர்பார்க்கப்படும் நன்னீர் மீன்வளம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0139/ '10

கௌரவ துலீப் விஜேசேகர,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஐந்து வருட நன்னீர் மீன்கள் மற்றும் நீர்வாழ் உயிரினங்களின் உற்பத்தி இயலளவினை அதிகரிக்கும் வேலைத்திட்டத்தினை ஆரம்பிக்கும் முகமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட வாவிகளினதும் நீர்த்தேக்கங்களினதும் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) குறிப்பிட்ட நீர்த்தேக்கங்களுக்கு விடுவிக்கப்படவுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நன்னீர் மீன் இனங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) விடுவிக்கப்படவுள்ள நன்னீர் மீன்களினதும், இறால்களினதும் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி நீர்வாழ் உயிரினங்களின் பண ரீதியான பெறுமதி யாதென்பதையும்,

(iii) குறிப்பிட்ட நீர்வாழ் உயிரினங்களை விடுவித்ததன் பின்னர் , அதிலிருந்து வருடாந்தம் எதிர்பார்க்கப்படும் நன்னீர் மீன், இறால் வளம் எவ்வவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2010, யூலை 01, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0002 / '10

கௌரவ சஜித் பிரேமதாச,- சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,-

(ஆ) (i) அம்மாந்தோட்டை மாவட்டத்தில் திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவினுள் கிரிந்த யால தொடக்கம் றண்மினிதென்ன கிராமம் வரை 7000 ஏக்கர் நிலப்பரப்பில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக, 4500 தொடக்கம் 6000 இடைப்பட்ட விவசாயக் குடும்பங்கள் சேனைப் பயிர்ச்செய்கை மூலம் தமது வாழ்வாதாரத்தைப் பேணிவருகின்றார்களென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) நிர்க்கதியான அந்த சேனை விவசாயிகளின் விவசாய நிலங்களை அவர்களுக்கு இழக்கச் செய்கின்ற திட்டமொன்று உள்ளதா,

(ii) அவ்வாறாயின் அந்த முயற்சியை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா?

என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்த விவசாய நிலங்கள் எப்போதும் காட்டு யானைகளினால் பாதிப்புக்குள்ளாக்கப் படுகின்றனவா,

(ii) அவ்வாறாயின் இந்தப் பாதிப்புகளைத் தவிர்த்துக்கொள்ள எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை,

(iii) மேற்படி நிலங்களுக்கான நீர், மின்சாரம், பாதைகள் ஆகிய அடிப்படை வசதிகளை வழங்கி விவசாயக் காணிகளாக அவற்றை அபிவிருத்தி செய்து, அவற்றின் உரிமையை விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா?

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0007/ ‘10

கௌரவ சஜித் பிரேமதாச,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கிரிந்த ஓயா கழி முகத்திலிருந்து தொர ஓயா கழி முகம் வரையுள்ள 396 ஏக்கர் பூராவும் பரந்துள்ள 04.05 கிலோ மீற்றர் நீளமும், 01.05 கிலோ மீற்றர் அகலமும், 30 மீற்றர் உயரமும் கொண்ட மாகம மணல் மேடு பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த மணல் மேட்டின் காரணமாக 676 ஏக்கர் வயலும் 31 ஏக்கர் மேலதிக பயிர்ச்செய்கைக் காணியும் கடலலையிலிருந்து பாதுகாக்கப் படுகின்றதென்பதையும்,

(ii) இந்த மணல் மேடானது தென்னிலங்கைக்குரிய பாலை, வீர, பொன்னாவரசு, போன்ற தாவரங்களை உள்ளடக்கியுள்ளதென்பதையும் அவர் அறிவாரா?

(இ) (i) இந்த மணல் மேடானது, அதிலுள்ள இல்மனைட், கிரனைட் ஆகிய கனியங்களை பெற்றுக் கொள்வதற்காக வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) சுமார் எட்டு அடிக்கு கீழுள்ள இந்த கனியங்களை பெற்றுக்கொள்ளும் பொது நில மட்டத்திலிருந்து மேலுள்ள மணல் மேற்பரப்பில் 60 வீதம் வரை அகற்றப்படுவதால் மாகம மற்றும் அதனை அண்மித்த கிராமங்களுக்கு பாதிப்புகள் ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) அவ்வாறெனின் அந்த பாதிப்புகளைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்னவென்பதையும்,

(ii) இந்த கருத்திட்டத்திற்காக பிரதேச மக்களின் விருப்பத்தைக் கேட்டறிவதை கருத்திட்டக் குழு மேற்கொண்டதா என்பதையும்,

(iii) மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் இந்தக் கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருப்பின் அவ்வாறு செய்யப்பட்டது யாருடைய வழிகாட்டலின் கீழ் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0070/ ’10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு 1 வருடத்திற்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, கட்டுவன பிரதேச செயலாளர் பிரிவின், வதுகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வலகடகந்த வீதியில் 150 மீற்றர் தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப் பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற பொது, நியமங்களுக்கெற்ப வெலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0009/'10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வன வளங்கள் முகாமைத்துவ கருத்திட்டத்திற்காக எந்த வெளிநாட்டு நிறுவனத்திடமிருந்து எவ்வளவு கடன் தொகை பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளது என்பதையும்,

(ii) இக்கருத்திட்டத்தின் கீழ் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வரைபடத்திற்கு உள்ளடக்கப்படுவதற்காக இலக்கமிடப்பட்டுள்ள காடுகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்,

(iii) வரைபடத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ள காணியின் பரப்பளவு எவ்வள வென்பதையும்,

(iv) அதற்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் ஆலோசகரர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட வெளிநாட்டவர்களுக்கு செலுத்தப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்ட வர்கள் யாவரென்பதையும்,

(iii) இந்த வெளிநாட்டு விஜயங்களுக்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் காடுகளின் எல்லைகளை குறித்துக் காட்டுவதற்காகப் பெறப்பட்ட கொங்கிறீட் தூண்களின் எண்ணிக்கை மற்றும் அதற்காக செலவுசெய்யப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்,

(ii) எஞ்சியுள்ள தூண்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) தேவையான எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் மிகுதியாகும் தூண்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) இந்தக் கருத்திட்டத்தின் வரைபடத்திற்குள்ளாக்கல் மற்றும் பயன்படுத்தப் பட்ட தூண்களின் பொருட்டு நில அளவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0015/ ' 10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை நாடு முழுவதிலும் வருடாந்தம் இடம்பெற்றுள்ள வாகன விபத்துக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவற்றுள் மரணம் சம்பவித்த வாகன விபத்துக்களின் எண்ணிக்கை மற்றும் சாதாரண வாகன விபத்துக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) இந்த வாகன விபத்துக்களில் மிக வேகமாக ஓட்டியதனால் மற்றும் மதுபானம் அருந்தியதன் காரணமாக சம்பவித்துள்ள விபத்துக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) இந்த விபத்துக்களினால் உயிரிழந்த, மற்றும் காயமடைந்த அல்லது அங்கவீனமுற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வாறு நாடு முழுவதிலும் ஏற்படும் வாகன விபத்துக்களை தவிர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0036/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு, -

(அ) கிரிபத்கொட, நுகேகொட, தெகிவல, கடவத்த, கொட்டாவ மற்றும் உறுகொடவத்த ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலம் ஒவ்வொன்றினதும்,

(i) கட்டிட நிர்மாணச் செலவையும்,

(ii) நீளம் மற்றும் தளப் பரப்பு ஆகியவற்றையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) அவை சாதாரண சீமெந்துக் கட்டமைப்பில் கட்டப்பட்டிருந்தால், அவை ஒவ்வொன்றினதும் கட்டிட நிர்மாணச் செலவு எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி நிர்மாணங்கள் தொடர்பாக, விலை மனுக்கள்; கோரப்பட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் கிடைக்கபெற்ற போட்டி விலை மனுதாரர்களின் பெயர்களையும்,

(iii) இக்கட்டிட நிர்மாணத்திற்கான. நிதி மூலங்கள் எவை என்பதையும்,

(iv) வட்டியுடன் கூடிய மொத்தச் செலவு எவ்வளவு என்பதையும்,

(v) கடன் கட்டி முடிக்க வேண்டிய கால அளவு எவ்வளவு என்பதையும்,

அவர் கூறுவாறா?

(ஈ) இன்றேல், ஏன்?

0024/ '10

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ் மற்றும் ஜப்பான் மொழிகளை கற்பிப்பதற்காக "கிராமிய கல்வி அபிவிருத்தி நிலையம்" எனும் நிறுவனமொன்று தென் மாகாணம் உட்பட பல மாகாணங்களில் செயற்பட்டு வருகின்றதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி பாடசாலைகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்ற ஏனைய மாகாணங்களும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளும் யாவையென்பதையும்,

(iii) அதற்காக கல்வி அமைச்சிலிருந்து அல்லது மாகாண கல்வி அமைச்சுகளிலிருந்து மேற்படி நிறுவனத்துக்கு அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளதா என்பதையும்,

(iv) அது எப்போது, எவரால், எத்தகைய நிபந்தனைகளின் கீழ் என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப் படுவதாயின் ஒரு மாணவனிடமிருந்து அறவிடப்படும் தொகை எவ்வள வென்பதையும் ,

(ii) கல்வி அமைச்சு அல்லது வேறு அரச நிறுவனமொன்று அதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0025/ '10

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ் மற்றும் ஜப்பான் மொழிகளை கற்பிப்பதற்காக "கிராமிய கல்வி அபிவிருத்தி நிலையம்" எனும் நிறுவனமொன்று தென் மாகாணம் உட்பட பல மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டத்திற்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும்போது பின்பற்றப்படும் முறைமை யாது என்பதையும்,

(ii) அவ்வாசிரியர்கள் ஆங்கிலம், தமிழ் மற்றும் ஜப்பான் போன்ற மொழிலகளை கற்பிப்பதற்கான தகுதியானவர்கள் என்பதற்கான சான்றிதழ் உள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி கருத்திட்டம் அரச நிறுவனமொன்றினால் மேற்பார்வை செய்யப்படு கின்றதா என்பதையும் ,

(vi) ஆமெனில், அது யாரால் என்பதையும் ,

(v) கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்று அல்லது பெறப்படாது இருக்கையில், சம்பந்தப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் செயற்படா திருப்பின், மேற்படி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் சம்பந்தமாக எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா ?

(ஆ) இன்றேல், ஏன் ?

0026/'10

கௌரவ சுனில் ஹந்துனெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2011 ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு, ஆங்கில மொழி மூலம் அரசியல் விஞ்ஞானம் மற்றும் விவசாய பாடங்களைக் கற்கும் மாணவர்களுக்கான பாடவிதானங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அவை பாடசாலைகளில் கற்பித்தலுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும்,

(iii) இன்றேல், ஆங்கில மொழி மூலம் அந்தப் பாடங்களைக் கற்றும் மாணவர்கள் எந்தப் பாடவிதானத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0131/ '10

கௌரவ றொசான் றணசிங்ஹ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) நாட்டில் இதுவரை தரிசாகக் காணப்பட்ட வயல்களில் "நாம் பயிர் செய்வோம் - நாட்டைக் கட்டியெழுப்புவோம்" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2008 - 2010 காலத்தினுள் மீண்டும் பயிரிடப்பட்ட வயல்களின் அளவு ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) அவ்வாறு பயிரிடப்பட்டமையினால் 2008 - 2010 காலத்தினுள் ஒவ்வொரு போகத்தின் போதும் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லின் அளவு ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) அவ்வாறு தரிசாகக் காணப்பட்ட வயல்களில் பயிரிடப்பட்டதால் கிடைத்த விளைச்சல் காரணமாக தேசிய பொருளாதாரத்திற்கு அளிக்கப்பட்ட பங்களிப்பு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0133/ '10

கௌரவ ஜானக பண்டார,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சுக்குச் சொந்தமான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின், 07 ஏக்கர் 02 ரூட் 05 பர்ச் விஸ்தீரணம் கொண்ட மட்டக்குளிய மோதர களஞ்சியசாலை, கோபோர்ட் தனியார் கம்பனிக்கு 65,317.00 ரூபா மாதாந்த வாடகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி உடன்படிக்கைக்கு அரச விலை மதிப்பீடும் அமைச்சரவை அனுமதியும் பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) சம்பந்தப்பட்ட குத்தகைக்காரர் குத்தகை உடன்படிக்கைக்கமைய சட்டபூர்வமாக நடந்துகொண்டுள்ளாரா என்பதையும்,

(iii) சட்டபூர்வமாக நடந்துகொண்டிருக்காவிடின் மீண்டும் அந்தக் களஞ்சியசாலையை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(iv) இதுவரை அவ்வாறு சட்டபூர்வமாக நடந்தகொள்ளாவிடின் அதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(v) இவர்கள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0140/ '10

கௌரவ எஸ்.சீ. முத்துக்குமாரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தற்போது இலங்கையில் இயங்கிவரும் தேசிய வனப்பூங்காக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) 2007, 2008, 2009 ஆம் ஆண்டுகளில் தேசிய வனப்பூங்காக்கள் ஈட்டிய வருமானம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அம்பாந்தோட்டை ரீதியாகம சபாரி பூங்காவாக அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிலப் பரப்பு எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ள திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0141/ '10

கௌரவ விக்டர் அந்தனீ,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிளிநொச்சி மின்சக்தி நிலையத்தை புனரமைக்கும் முதலாம், இரண்டாம், கட்டங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த நிதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) ஒவ்வொரு கட்டங்களின் இறுதியிலும் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கும் மொத்த மின் அலகுகளின் அளவு எத்தனை மெகாவொட் என்பதையும்,

(iii) அதன் மூலம் பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கும் புதிய மின்சார இணைப்புக்கள் எவ்வளவென்பதையும்,

(iv) புனரமைப்புப் பணிகள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ள திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வவுனியாவிலிருந்து சுன்னக்குளம் வரையிலான, மின்சாரத்தை ஊடுகடத்தும் செயற்பாட்டை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் முதலாம், இரண்டாம் கட்டங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்தச் செலவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) முதலாம், இரண்டாம் கட்டங்களின் கீழ் மின்சாரத்தை ஊடுகடத்துகின்ற உத்தேச தூரத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(iii) கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ள திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0143/ '10

கௌரவ அசல ஜாகொடகே,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 642 கிழக்கு கலபாத்த கிராம கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட கிம்புலவில கந்த குடியேற்றத்தின் நீர் விநியோகத் திட்டம்,

(i) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்,

(ii) திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு உதவியளித்த வங்கி யாதென்பதையும்,

(iii) அதற்காகக் கிடைக்கப் பெற்ற நிதியுதவி எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நீர் விநியோகத் திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் நலன்பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இந்நீர் விநியோகத் திட்டம் வெற்றியளிக்கவில்லையா என்பதையும்,

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0146/ ’10

கௌரவ சாந்த பண்டார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கிராமிய மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் ஆண்மீக அபிவிருத்திக்கும் கமநெகும நிகழ்ச்சித்திட்டம் அமுலாக்கப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டில் குருநாகல் மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(ii) அதன் மூலம் நடைமுறைப்படுத்தபட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) கமநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குருநாகல் மாவட்டத்திற்கு 2010 ஆம் ஆண்டுக்காக நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனின், அத்தொகை எவ்வளவென்பதையும்,

(v) அதன்கீழ் தற்பேது கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(vi) ஆமெனின் அக்கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2010, யூலை 02, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0071 / ’10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் கொங்ரீட் இட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கட்டுவன பிரதேச செயலாளர் பிரிவின் வல்கமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட வல்கமுல்ல கோங்கரஹேன வீதியின் 250 மீற்றர் தூரம் தற்போது கொங்கிரீட் உடைந்து குன்றும் குழியுமாக முழுமையாக சேதமடைந்த நிலையிலிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்ப பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0072 / '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் கொங்ரீட் இட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கட்டுவன பிரதேச செயலாளர் பிரிவின் சபுதந்திரிகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட நாவலேபொக்க வீதியின் 3/4 கிலோ மீற்றர் வரையிலான தூரம் தற்போது கொங்கிரீட் உடைந்து குன்றும் குழியுமாக முழுமையாக சேதமடைந்த நிலையிலிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்ப பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0073 / '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் கொங்ரீட் இட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வலஸ்முல்ல பிரதேச செயலாளர் பிரிவின் கலஹிட்டிய தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட துன்முல்லஹேன, மகஹேன வீதியின் 1 கிலோ மீற்றர் தூரம் தற்போது கொங்கிரீட் உடைந்து குன்றும் குழியுமாக முழுமையாக சேதமடைந்த நிலையிலிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்ப பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0037 / '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) பெருந்தொகையான இலங்கை கடற்றொழிலாளர்கள் வெளிநாடுகளில் தடுப்புக்காவலில் உள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2005 சனவரி தொடக்கம் இற்றைவரை வெளிநாடுகளில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவர்களில் இற்றைவரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கையினையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0096/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்களாக செலுத்தப்படவேண்டிய மொத்த பொதுக் கடன் தொகையை,

(i) 1948 முதல் 1994 வரை ஒவ்வொரு வருட இறுதியிலும் எவ்வளவு என்பதை வெவ்வேறாகவும்,

(ii) 1995 முதல் 2010 இல் இற்றைவரை ஒவ்வொரு வருட இறுதியிலும் எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையில் தனித்தனியாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி (i), (ii) ஆகிய காலப்பகுதிகளுக்கான மொத்த தவணை முறைச் செலுத்தல் (முதல் + வட்டி) எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) 1948 முதல் 2003, 2004, 2005, 2006, 2007 மற்றும் 2008 முதல் இற்றைவரை வழங்கப்பட்ட கடன்களுக்கான சராசரி வட்டிக்கான செலவையும் சேர்த்து பின்வரும் நிறுவனங்கள், நாடுகளுக்கான மொத்தக் கடன் எவ்வளவு என்பதை அவர் தெரிவிப்பாரா?

(i) உலக வங்கி

(ii) சர்வதேச நாணய நிதியம்

(iii) ஆசிய அபிவிருத்தி வங்கி

(iv) ஜே.பி.ஐ.சி

(v) ஐக்கிய அமெரிக்கா

(vi) ஜப்பான்

(vii) ஐரோப்பிய ஒன்றிய நாடுகள்

(viii) இந்தியா

(ix) சீனா

(ஈ) கடந்த 5 வருடங்களுக்கான தலா வருமானத்துடன் ஒப்பிட்டு தலா படுகடனை வருடாந்த அடிப்படையில் அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0092/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த ஐந்து வருடங்களாக,

(i) சேகரிக்க எதிர்பார்க்கப்பட்ட மொத்த நேரடி வரியையும்,

(ii) சேகரிக்க எதிர்பார்க்கப்பட்ட மொத்த வரியில் சேகரிக்கப்பட்ட மற்றும் சேகரிக்கப்படாத வரியின் தொகையையும்,

(iii) சேகரிக்கப்படாத வரி தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கையையும்,

(iv) சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் செலுத்தப்பட்ட வெகுமதிகளின் தொகையையும்,

(v) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பராமரிக்கப்பட்டுவரும் வரிக்கோவைகளின் எண்ணிக்கையையும்

வருடவாரியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடந்த ஐந்து வருடங்களாக,

(i) ஒவ்வொரு வருடமும் திசம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு, சேகரிக்கப்படவேண்டிய பெறுமதிசோர் வரி, படுகடன் வரி மற்றும் விமான நிலைய துறைமுக வரி ஆகியவற்றின் தொகையையும்,

(ii) மேற்படி வரிகளில் சேகரிக்கப்பட்ட மற்றும் சேகரிக்கப்படாத தொகையையும்,

(iii) சேகரிக்கப்படாத வரிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையையும்,

வருடவாரியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) எதிர்வரும் மூன்று ஆண்டுகளில் நேரடி வரிகள், பெறுமதிசேர் வரி, விமான நிலைய, துறைமுக வரி என்பவற்றின் மூலமாக சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் தொகையை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0144/ '10

கௌரவ அசல ஜாகொடகே,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) களுகங்கை நீர் வழங்கல் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்,

(ii) அதன்மூலம் நலன் பெறுவதற்கு எதிர்பார்த்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நீர் வழங்கல் கருத்திட்டத்தின் முதலாம் இரண்டாம் கட்டங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதித்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) அக்கருத்திட்டம் ஆரம்பிக்கபட்ட திகதி யாதென்பதையும்,

(iii) அதனை நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ள திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0145/ '10

கௌரவ அசல ஜாகொடகே,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஆம் ஆண்டு இறுதியில் அறிக்கையிடப்பட்ட யானைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) 2009 ஆம் ஆண்டில் யானை-மனித மோதல்களால் இறந்த யானைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) 2009 ஆண்டில் யானைகள் தாக்கியதால் இறந்த நபர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) யானை-மனித மோதலைக் குறைப்பதற்கு உத்தேச வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனின், அது யாதென்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0147/ '10

கௌரவ சாந்த பண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) குருநாகல் மாவட்டத்தில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்மான காணியின் அளவு எவ்வளவென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அக்காணியின் ஒரு பகுதி திணைக்கள நிர்வாகத்தினின்றும் விலகியிருந்ததென்பதையும்,

(ii) அவ்வாறான சில காணிகளில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் நிரந்தரமாக வசிக்கின்றார்கள் என்பதையும்,

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) அக்குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மீண்டும் அக்காணிகளை திணைக்கள நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதற்கு ஏற்பாடொன்று உள்ளதா?

(iii) ஆமெனின், வசித்துவரும் குடும்பங்கள் தொடர்பில் எடுக்கப்படும் நியாயமான நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா

(ஈ) இன்றேல், ஏன்?

0148/ '10

கௌரவ சாந்த பண்டார,— நீர்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) குருநாகல் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் தெதுரு ஓயா நீர்ப்பாசன கருத்திட்டம் பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) அக்கருத்திட்டத்திற்காக அரசாங்கம் ஒதுக்கியுள்ள நிதி எவ்வளவென்பதையும்,

(ii) அக்கருத்திட்டத்தின் தற்கால முன்னேற்றம் சதவீதமாக எவ்வளவென்பதையும்,

(iii) அக்கருத்திட்டத்தின் மூலம் நலன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வெளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) தெதுரு ஓயா கருத்திட்டத்தினூடாக மாத்திரம் குருநாகல் மாவட்ட விவசாயிகளின் நீர்ப்பிரச்சினையை தீர்க்க முடியாதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) ஆமெனின், வேறொரு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0142/ ‘10

கௌரவ விக்டர் அந்தனீ,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) பத்தேகம மாக்குருக்கொடையில் அமைக்கப்பட்ட இளைஞர் விவகார விளையாட்டு அபிவிருத்தி மத்திய நிலையத்துக்குச் சொந்தமான,

(i) காணியின் விஸ்தீரணம் எவ்வளவென்பதையும்,

(ii) கட்டடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iii) அக்கட்டடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டடங்களை நிர்மாணிப்பதற்காக செலவு செய்யப்பட்ட மொத்த நிதி எவ்வளவென்பதையும்,

(ii) அதன் பராமரிப்பு பணிகளுக்காக அமர்த்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0151/ ‘10

கௌரவ வை. ஜி. பத்மசிறி,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பசுமைச் சுற்றுலா கைத்தொழில் கொள்கையின் நோக்கங்கள் என்னவென்பதையும்,

(ii) அந்த உத்தேசக் கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள கிராமங்கள் எவை என்பதையும்,

(iii) அக்கிராமங்களை தெரிவு செய்வதற்கான காரணங்கள் யாவை என்பதையும்,

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா

(ஆ) குறிப்பிட்ட கருத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராம அபிவிருத்திக்கும் மதிப்பிடப்பட்ட நிதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0054/’10

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) வடமாகாணத்தின் ஏறக்குறைய 35 சதவீதமான பிரதேசத்தையுள்ளடக்கியுள்ள விலிகாமம் வடக்கு, உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரகடனம் எப்போது செய்யப்பட்டது என்பதையும்,

(ii) அத்தகைய பிரகடனம் இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0114/'10

கௌரவ (திருமதி) ஸ்ரீயானி விஜேவிக்கிரம,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) திகாமடுல்ல மாவட்டத்தின் அம்பாறை தேர்தல் தொகுதியில்,

(i) தேசிய நீர் வழங்கல் சபையூடாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சமூக குடிநீர் வழங்கல் திட்டங்கள் எவை என்பதையும்,

(ii) அந்த ஒவ்வொரு நீர் வழங்கல் திட்டமும் ஆரம்பிக்கப்பட்ட திகதிகள் எவையென்பதையும்,

(iii) அவற்றின் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படும் பிரதேச செயலாளர் பிரிவுகள் எவை என்பதையும்,

(iv) ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கும் நீர் வழங்கப்பட்டது எத்திகதியிலிருந்து என்பதையும்,

(v) சமூக நீர் விநியோக கருத்திட்டங்களை வழங்கக்கூடிய பிரதேச செயலாளர் பிரிவுகள் எவை என்பதையும்,

(vi) அந்தக் கருத்திட்டங்களை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது எத்திகதியிலிருந்து என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0268/ '10

கௌரவ ரஊப் ஹகீம்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பொதுமக்கள் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக வாடகை அடிப்படையில் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகளுக்கு அரசாங்கத்தினால் பெற்றுக்கொடுக்கப்படும் ரூ.1500.00 மாதாந்த எரிபொருள் மானியத்தை பெற்றுக்கொள்ளும் பொருட்டு பதிவு செய்துள்ள, கண்டி மாவட்டத்தின் வாடகை முச்சக்கர வண்டி உரிமையாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இவர்களுள் மேற்படி எரிபொருள் மானியம் வழங்கப்பட்டுள்ள முச்சக்கர வண்டி உரிமையாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iii) இவர்களின் பெயர், விலாசங்கள், முச்சக்கர வண்டி இலக்கங்கள் மற்றும் மேற்படி மானியங்கள் முதலில் வழங்கப்பட்ட திகதி, பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், என்?

---

## 2010, யூலை 03, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0005/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,- கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,-

(ஆ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கமநல மத்திய நிலைய ஆளுகைப் பிரதேசங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஆளுகைப் பிரதேசங்கள் யாவை என்பதையும்,

(iii) கமநல மத்திய நிலையங்கள் மட்டத்தில் காணப்படும் குத்தகை விவசாயிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) குத்தகை விவசாயிகளின் முகவரிகளை உள்ளடக்கிய பெயர்ப்பட்டியலொன்றை கமநல மத்திய நிலையங்கள் மட்டத்தில் பெற்றுத் தருவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0074 / '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு 8 மாதங்களுக்கு முன்னர் கொங்ரீட் இட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வலஸ்முல்ல பிரதேச செயலாளர் பிரிவின் பாத்தேகம கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பாத்தேகம, ஹந்துகல வீதியின் 600 மீற்றர் தூரம் தற்போது கொங்கிரீட் உடைந்து குன்றும் குழியுமாக முழுமையாக சேதமடைந்த நிலையிலிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்ப பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0075 / '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் கொங்ரீட் இட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெலிஅத்த பிரதேச செயலாளர் பிரிவின் மாலிகாதென்ன கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பொதேவெல, போத்தகட வீதியின் 200 மீற்றர் வரையிலான தூரம் தற்போது கொங்கிரீட் உடைந்து குன்றும் குழியுமாக முழுமையாக சேதமடைந்த நிலையிலிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்ப பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0093/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையில் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை இயங்கிவரும் ஆடைக் கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்,

(ii) தொழிற்சாலை ஒவ்வொன்றும் ஆரம்பிக்கப்பட்ட போது அதிலிருந்த மொத்த வேலையாட்களின் எண்ணிக்கையையும்,

(iii) இற்றை வரை இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் மொத்த வேலையாட்களின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்,

(iv) மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களையும்,

(v) 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை ஏற்றுமதி செய்யப்பட்ட ஆடைகளின் மொத்த அளவு மற்றும் அதன் மூலம் பெறப்பட்ட வருமானத்தின் மொத்தப் பெறுமதி ஆகியவற்றை இலங்கை ரூபாவிலும், அமெரிக்க டொலர்களிலும் வெவ்வேறாகவும்,

(vi) இலங்கையில் உள்ள புடைவைக் கம்பனிகளின் எண்ணிக்கையையும், அவற்றின் உற்பத்தித் திறனையும், அங்கு நெசவு செய்யப்பட்ட மற்றும் பின்னப்பட்ட புடைவை வகைகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0094/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 முதல் 2010 வரை, ஒவ்வோர் வருடமும் யூன் மாதம் 30 ஆம் திகதியலவில், கொழும்பு மாவட்டத்தில் 15 தேர்தல் தொகுதிகளிலும் உள்ள சமுர்தி பெறுநர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும் ,

(ii) மேற்படி குடும்பங்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற சமுர்தி மானியத்தின் அலவின் அடிப்படையில் அவர்கள் எந்த பிரிவுட்குட்படுகின்றனர் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2004, 2005, 2006, 2007, 2008, 2009 ஆகிய வருடங்களில் பணவீக்க வீதம் எவ்வளவு என்பதையும் ,

(ii) 2004 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு 2010 வரை தொடர்ந்து வந்த ஆண்டுகளில் பணவீக்கத்தை குறைத்ததன் பின்னர் சமுர்த்தி பெறுநர்கள் பெற்றுக்கொண்ட கொடுப்பனவின் நிதியின் மெய்ப்பெறுமதி என்ன என்பதையும்,

(iii) சமுர்த்தி பெறுநர்களின் கொள்வனவுச் சக்தி குறைந்துள்ளது என்பதை இது காட்டுகின்றது என்பதையும்,

(iv) மேற்கூறிய காரணங்களினால் சமுர்தி பெறுநர்களுக்கு மத்தியில் ஏழ்மை அதிகரித்து உள்ளதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0095/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2010.06.01ஆம் தேதியன்றுள்ளவாறு அமைச்சரவை அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் ஆகியோருக்குச் செலுத்தப்பட்ட தொகைகள், மற்றும்,

(ii) அமைச்சர்களும் அவர்களது ஆளணியினரும் அனுபவித்துவரும் பிற சலுகைகள் என்பவற்றை,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0115/’10

கௌரவ (திருமதி) ஸ்ரீயானி விஜேவிக்கிரம,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) தெஹிஅத்த கண்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும்,

(i) வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) காணி அளிப்பு பத்திரங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்தையும்,

(iii) தற்போது காணி அளிப்பு பத்திரங்கள் வழங்கப்படுவதற்கு, உத்தேச, கோப்புகள் தயாரிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

வெவ்வேறாக அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி காணி அளிப்பு பத்திரங்களை வழங்குவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்,

(ii) அப்பணிகளை துரிதப்படுத்துவது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0101/’10

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான காலத்தினுள் அந்தந்த ஆண்டுகளில் இலங்கையினுள் ,

(i) இயங்கி வந்த பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் உதவிப் பாடசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட ரீதியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) மூடப்பட்ட பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் உதவிப் பாடசாலைகளின் எண்ணிக்கையினையும், தனித்தனியாக அவை எவையென்பதையும்,

(iii) ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் உதவிப்பாடசாலைகளின் எண்ணிக்கையினையும், தனித்தனியாக அவை எவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை இலங்கையினுள் பாடசாலைகள் மூடப்பட்டதற்கான காரணம் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0118/ '10

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) திகாமடுல்ல பிரதேச செயலாளர் பிரிவில் இருக்கின்ற இஸ்மாயில்புரம் கிராமத்தில் சுகாதார வசதிகள் இல்லாத நிலையில் அங்குவாழ் மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கின்றனர் என்பதையும்,

(ii) அம்மக்கள் அவசர வைத்திய சிகிச்சைகளுக்காக அம்பாறை, சம்மாந்துறை போன்ற தூர இடங்களுக்கு செல்ல ஏற்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் குறைந்தது ஒரு கிராம வைத்திய நிலையமாவது இருக்கின்ற நிலையில் இந்த இஸ்மாயில்புரம் கிராமத்திற்கு அவ்வாறானதோர் வசதியையாவது விரைவில் பெற்றுக்கொடுக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0135/ '10

கௌரவ அருந்திக்க பர்னாந்து,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை இராணுவத்திற்கு, அமெரிக்காவில் டெக்சாஸ் பிராந்தியத்தில் அமைந்துள்ள பிரிடீஷ் போர்னியோ டிபென்ஸ் கம்பனியினூடாக, ஆயுதங்கள் அல்லது வேறு பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டிருப்பின் அதற்காக ஏற்கப்பட்டுள்ள செலவு ஒவ்வோர் ஆண்டிலும் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அக்கம்பனி உரிமையாளர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவை என்பதையும்,

(ii) மேற்படி உரிமையாளர்களுக்கும் இலங்கை இராணுவத்தின் உத்தியோகத்தர்களுக்கும் இடையில் ஏதேனும் தொடர்பு உள்ளதா என்பதையும்,

(iii) அவ்வாறாயின், அத்தகைய தொடர்புள்ளவர்களின் பெயர்கள யாவை என்பதையும்,

(iv) குறிப்பிட்ட கம்பனியுடன் அத்தகைய ஓர் தொடர்பு காணப்படுமாயின், அது குறித்து எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0136/ ‘10

கௌரவ அருந்திக்க பர்னாந்து,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்ட ஹய்கோப் இன்டர்னஷனல் கம்பனி இலங்கை இராணுவத்திற்காக ஆயுதங்களை அல்லது வேறு பொருட்களைக் கொள்வனவு செய்துள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டிருப்பின் அவை யாவை என்பதையும்,

(iii) இந்தக் கம்பனி உரிமையாளர்களது பெயர்களும் முகவரிகளும் யாவை என்பதையும்,

(iv) அப்பொருட்களின் கொள்வனவு கேள்விப்பத்திர நடைமுறையொன்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) இன்றேல், அக்கொள்வனவு தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டியவர்களினது பெயர்கள் யாவை என்பதையும்,

(vi) அவர்கள் தொடர்பில் கடைப்பிடிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0137/ ‘10

கௌரவ அருந்திக்க பர்னாந்து,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2002 ஆம் ஆண்டளவில், யாழ்ப்பாண இராணுவ தலைமையகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புகளுக்காக ரூபா. 2,018,331.00 நிலுவைப்பணத் தொகையொன்று ஸ்ரீ லங்கா ரெலிகொம் கம்பனிக்கு செலுத்தவேண்டி இருந்தது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) மேற்படி கட்டணப்பட்டியல்கள் தீர்க்கப்படாமை தொடர்பாக ஸ்ரீ லங்கா ரெலிகொம் கம்பனி சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தது என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) தற்போது, மேற்படி நிலுவைப்பணத் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், எந்த நிதியத்திலிருந்து என்பதையும்,

(iii) அதற்கான அனுமதியினை வழங்கியவரின் பெயர் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0263/ ‘10

கௌரவ ரஊப் ஹகீம்,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி கடவத்சதர பிரதேச செயலகப் பிரிவில், காலி மாநகர சபை எல்லையில் அமைந்துள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான மொஹிதீன் வத்த வீடமைப்புத் திட்டத்தில் உத்தியோகபூர்வமாக குடியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அக்குடியிருப்பாளர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) 20 ஆண்டுகளுக்கும் அதிகமான காலத்திலிருந்து, மொஹிதீன் வத்த வீடமைப்புத் திட்டத்தில் மேற்படி நிரந்தரக் குடியிருப்பாளார்களின் வீடுகளுக்கு உரித்துப் பத்திரங்கள் (உறுதிகள்) இதுவரை வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்,

(ii) மேற்படி நிரந்தரக் குடியிருப்பாளர்களுக்கு உரித்துப் பத்திரங்களை (உறுதிகள்) தாமதமின்றி பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

---

## திகதி குறிப்பிடப்படாத பிரேரணை முன்னறிவித்தல்கள்

பா.37/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க

கௌரவ எச்.எம்.எம். ஹரிஸ்

கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல

கௌரவ அர்ஜுன ரனதுங்க

கௌரவ நிமல் விஜேசிங்க

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ ஜே. ஸ்ரீ ரங்கா

கௌரவ ஹரின் பெர்னாந்து,— நாட்டில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றமை தொடர்பில் ஆராய்ந்து, அறிக்கை செய்வதற்கான பாராளுமன்றத் தெரி குழு,—

நாட்டில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றமையாலும்,

இத்தட்டுப்பாட்டிற்கான காரணங்களை கௌரவ சுகாதார அமைச்சர் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தியுள்ளமையாலும்,

இந்த நிலையை நிவர்த்திப்பதற்குப் பரிகார நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படாவிடில் அது ஒரு பேரழிவிற்கு இட்டுச் செல்லுமாகையாலும்,

(அ) இப் பற்றாக்குறைக்கான காரணங்கள் தொடர்பாக விசாரிப்பதற்கும்,

(ஆ) நிலைமையைச் சமாளிப்பதற்குத் தேவையான குறுகியகால நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்கும்,

(இ) எதிர்காலத்தில் இந்த நிலைமை மீண்டும் ஏற்படுவதை தடுப்பதற்குத் தேவையான நிரந்தர நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்கும்,

பாராளுமன்றத் தெரி குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டும் என இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்பட வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எதுவாக இருந்த போதிலும், குழுவானது இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. அக்குழுவானது,

(அ) கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) ஆட்கள், பத்திரங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை வரவழைப்பதற்கும், பாராளுமன்றின் அல்லது குழுவின் முன் தோற்றுமாறும் அந்த நபர் வைத்திருக்கும் அல்லது அந்த நபரின் கட்டுப்பாட்டிலிருக்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகப் பதிவேட்டை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்குமாறு எவரேனும் ஒருவருக்குக் கட்டளையிடுவதற்கும்;

(இ) குழுவின் தவிசாளரினால் அல்லது அந்நோக்கத்திற்காக விசேடமாக அனுமதிக்கப்பட்ட ஒரு நபரினால் செய்து வைக்கப்படும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரையின் மீது சாட்சி கூறும் சாட்சிகளை வாய்மொழிமூலப் பரிசீலனை மூலம் சரிபார்ப்பதற்கு அல்லது வேறு வகையில் உறுதிப்படுத்துவதற்கும்;

(ஈ) குழுவுக்கு உதவ உரிய துறைகளிலிருந்தான, நிபுணர்களதும் வல்லுநர்களதும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கும் அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்.

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஆறு மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும்.

பா.38/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ அகில விராஜ காரியவசம்

கௌரவ ஜெ. ஸ்ரீ ரங்கா

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க

கௌரவ ஹரின் பெர்னாந்து

கௌரவ பாலித தெவரப்பெரும

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ அர்ஜுன ரனதுங்க

கௌரவ நிமல் விஜேசிங்க,— கொழும்பு நகரத்திலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் அடிக்கடி வெள்ளம் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்து, அறிக்கை செய்வதற்கான பாராளுமன்றத் தெரி குழு,—

கடந்த பல தினங்களாக கொழும்பு மாநகர சபை பிரதேசத்திலும் கொழும்பு மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளிலும் மிகக் கடுமையான வெள்ளம் ஏற்பட்டிருப்பதாலும்,

கொழும்பு மாநகர சபை மற்றும் மாவட்டம் ஆகிய இரண்டையும் சேர்ந்த மக்களுக்கு இந்நிலைமை வழக்கமாக மீண்டும் மீண்டும் ஏற்படுகின்ற ஒரு நிகழ்வாகியுள்ளதாலும்,

இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு பொறுப்புமிக்கவர்களால் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப் படாதுள்ளமையினாலும்,

இந்த வெள்ள நிலைமை மீண்டும் மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாதுள்ளதாலும்,

காலப்போக்கில் நிலைமை மேலும் மோசமடைந்து சென்றுள்ளதாலும்,

வெள்ளம் வற்றியதும் எல்லாவற்றையும் மறந்துவிடும் போக்கு காணப்படுவதாலும்,

இது மிகவும் திருப்தியற்ற ஒரு நிலைமை என்பதாலும்,

(அ) கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறத்திலும் மாவட்டத்திலும் மீண்டும் மீண்டும் வெள்ளம் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்வதற்கும்,

(ஆ) மேலே சொல்லப்பட்டவாறு வெள்ளம் ஏற்படுவதைத் தடுப்பதற்குத் தேவையான உடனடி மற்றும் குறுகிய கால நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கும்,

(இ) இந்தப் பிரச்சினை மீண்டும் மீண்டும் ஏற்படுவதை நிரந்தரமாகத் தடுப்பதற்கான வழிவகைகைள விதந்துரைப்பதற்கும், பாராளுமன்றத் தெரி குழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அக்குழு இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. அக்குழுவானது,

(அ) அதன் கூட்ட நட்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) ஆட்கள், பத்திரங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை வரவழைப்பதற்கும், பாராளுமன்றின் அல்லது குழுவின் முன் தோற்றுமாறும் அந்த நபர் வைத்திருக்கும் அல்லது அந்த நபரின் கட்டுப்பாட்டிலிருக்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகப் பதிவேட்டை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்குமாறு எவரேனும் ஒருவருக்குக் கட்டளையிடுவதற்கும்;

(இ) குழுவின் தவிசாளரினால் அல்லது அந்நோக்கத்திற்காக விசேடமாக அனுமதிக்கப்பட்ட ஒரு நபரினால் செய்து வைக்கப்படும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரையின் மீது சாட்சி கூறும் சாட்சிகளை வாய்மொழிமூலப் பரிசீலனை மூலம் சரிபார்ப்பதற்கு அல்லது வேறு வகையில் உறுதிப்படுத்துவதற்கும்;

(ஈ) குழுவுக்கு உதவ உரிய துறைகளிலிருந்தான, நிபுணர்களதும் வல்லுநர்களதும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கும் அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்.

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஆறு மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும்.

பா.58 / '10

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ ஜோண் அமரதுங்க

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ டி. எம். சுவாமிநாதன்

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ ஜெ. ஸ்ரீரங்கா,— தேர்தல்களுடன் தொடர்புபட்ட சட்டங்களை மீளாய்வு செய்வதற்கும், திருத்தங்களை விதந்துரைப்பதற்குமான பாராளுமன்றத் தெரி குழு,—

இலங்கையில் தேர்தல் முறைமையை மறுசீரமைப்பதற்கு கடந்த பல வருடங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினாலும்;

தேர்தல் மறுசீரமைப்பைப் பற்றி ஆராய்வதற்கு, 5 ஆவது பாராளுமன்றத்தின் போதும் 2006ஆம் ஆண்டில் 6ஆவது பாராளுமன்றத்தின் போதும் நியமிக்கப்பட்டவை அடங்கலாக பல சந்தர்ப்பங்களில் தெரிகுழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளமையினாலும்;

இக்குழுக்களால் பல இடைக்கால அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையினாலும்;

இக்குழுக்களின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமையினாலும்;

(அ) தேர்தல்கள் தொடர்பான சட்டங்களுக்கு, அதிலும் குறிப்பாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம், உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் சட்டம், மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம், பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டம் ஆகியவற்றுக்கு கடந்த பல வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திருத்தங்கள் மற்றும் மேலே சொல்லப்பட்ட சட்டங்களின் ஏற்பாடுகளுக்குப் பொருந்தத்தக்கதாக ஆக்கப்பட்ட விசேட ஏற்பாடுகள் ஆகியவற்றுடன் சேர்த்து மேலே குறிப்பிடப்பட்ட சட்டங்களை மீளாய்வு செய்வதற்கும்;

(ஆ) இந்தச் சட்டங்களை மீளாய்வு செய்வதற்கும், திருத்துவதற்கும், ஒருங்கிணைப்பதற்குமான தேவையை ஆராய்வதற்கும்;

(இ) தேர்தல்கள் தொடர்பான தற்போதைய சட்டங்களில் அவசியமான சீர்திருத்தங்களையும் திருத்தங்களையும் விதந்துரைப்பதற்கும்;

பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிகப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியல் கட்டளை இல.95இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குழு இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. அக்குழுவானது —

(அ) அதன் நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை, பத்திரங்களை மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும், எந்தவொரு நபரையும் பாராளுமன்றத்தின் முன்போ அல்லது அத்தகைய குழுவின்முன் தோற்றவும் அத்தகைய நபர் வசமுள்ள அல்லது அவரின் கட்டுப்பாட்டிலுள்ள எந்தவொரு பத்திரத்தையோ, புத்தகப் பதிவேட்டையோ அல்லது ஆவணத்தையோ சமர்ப்பிக்கவும் ஆணையிடுதற்கும்;

(இ) குழுவின் தவிசாளர் முன்னிலையிலோ அல்லது அந்நோக்கத்திற் கென விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரின் முன்னிலையிலோ சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளும் சாட்சிகளின் சாட்சியத்தை வாய்மொழி விசாரணை மூலமாக ஊர்ஜிதம் செய்தற்கு அல்லது வேறுவிதமாக உறுதி செய்தற்கு மற்றும் சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவிற்குத் துணை புரியும்பொருட்டு உரிய துறைகளிலுள்ள வல்லுநர்களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும்; மற்றும்

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் பராளுமன்ற ஒத்திவைப்பு எதனையும் கருத்திற் கொள்ளாது தனது கூட்டத்தைக் கூட்டுவதற்கும் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும்.